**செய்தி வெளியீடு எண்: 05/02/2021** **நாள்: 10.02.2021**

**பத்திரிக்கை செய்தி**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம். சி. சம்பத் அவர்கள் இன்று (10.02.2021) சென்னை மெட்ரோ இரயில் முதல் கட்ட விரிவாக்கத்தில் நடைபெற்று வரும் இறுதிக்கட்ட பணிகளை ஆய்வு செய்தார்.

சுங்கச்சாவடி (Tollgate) மற்றும் விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையங்களில் முடிவுற்ற பணிகளையும் நடைபெற்று வரும் இறுதிக்கட்ட பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அனைத்துப் பணிகளையும் குறித்த காலத்தில் விரைந்து முடிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். பின்னர், மீதமுள்ள 5 மெட்ரோ இரயில் நிலையங்களில் முடிவுற்ற பணிகள் குறித்தும் நடைபெற்று வரும் இறுதிக்கட்ட பணிகள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், இந்த வழித்தடத்தில் பயணிகள் இரயில் சேவையை விரைவில் தொடங்குவதற்கான அனைத்து ஆயத்தப் பணிகளையும் முடித்து தயார் நிலையில் இருக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச் செயலாளர் திரு. எம். ஏ. சித்திக் இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர்கள் திரு. ராஜீவ் நாராயண் திவேதி (திட்டங்கள்), திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), மற்றும் உயர் அலுவலர்கள் ஆய்வின் போது உடன் சென்றிருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**